5154

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

15 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கிறிஸ்தவம் I

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

**1.** “ஆழத்திற்கு தள்ளிக்கொண்டு போய் வலைகளைப் போடுங்கள்” என்று இயேசு கூறியது
(1) சீமோன் பேதுருவிற்கு ஆகும். (2) அந்திரேயாவிற்கு ஆகும்.
(3) யாக்கோபிற்கு ஆகும். (4) யோவானுக்கு ஆகும்.

**2.** “ஆண்டவரே இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று மன்றாடியவர் யார்?
(1) பேதுரு (2) ஸ்தேவான் (3) பவுல் (4) யாக்கோபு

**3.** இரண்டாம் மறைதூதுப் பணியில் பவுலுடன் இணைந்து சென்றவர்கள்
(1) பர்னபா, யோவான் மாற்கு, லூக்கா
(2) பர்னபா, சீலா, லூக்கா
(3) சீலா, திமோத்தேயு, லூக்கா
(4) அரிஸ்தாகர்ஸ், சீலா, லூக்கா

**4.** கிறிஸ்துவின் பெயருக்காக அவர் துன்புற வேண்டும் எனக் கூறியது யார்?
(1) யோவான் மாற்கு (2) பவுல் (3) பர்னபா (4) கொர்னேலியு

**5.** பெந்தகொஸ்தே நாளில் முதல் அருளுரையை ஆற்றியவர் யார்?
(1) தூய யோவான் (2) தூய மத்தேயு (3) தூய பேதுரு (4) தூய பவுல்

**6.** இறைவனின் உயர் படைப்பாகக் கருதப்படுவது யாது?
(1) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்
(2) மரம், செடி, சுற்றாடல்
(3) மிருகங்கள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள்
(4) ஆதாம், ஏவாள் ஆகிய மனிதர்கள்

**7.** மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டென இயேசு கூறியது
(1) முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்தியபோதாகும்.
(2) கை சூம்பியவரைக் குணப்படுத்தியபோதாகும்.
(3) குஷ்டரோகியைக் குணப்படுத்தியபோதாகும்.
(4) நூற்றுக்கதிபதியின் பணியாளரைக் குணப்படுத்தியபோதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**8.** “நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர், அவரது பிறப்பால் பலர் மகிழ்ச்சிடைவர்.” இது யாருடைய பிறப்பைக் குறித்துக் கூறப்பட்டது?
(1) குழந்தை இயேசுவின் பிறப்பு (2) எலிசபெத்தின் பிறப்பு
(3) திருமுழுக்கு யோவானின் பிறப்பு (4) செக்கரியாவின் பிறப்பு

**9.** சதுசேயரின் அதிகாரத்தின் மையமாகக் காணப்பட்டது
(1) அதிதூய பலிபீடம் (2) தொழுகைக் கூடங்கள்
(3) ரோம அதிகாரப் பிரிவுகள் (4) எருசலேம் தேவாலயம்

**10.** இயேசுவின் உடலை கல்லறையில் அடக்கம் செய்வதற்குப் பொறுப்பேற்றவர் / பொறுப்பேற்றவர்கள்
(1) சிரேன் ஊர் சீமோன் (2) அரிமத்தியா யோசேப்பு
(3) மார்த்தாள், மரியாள் (4) சூசன்னா, மகதலேனா மரியாள்

**11.** தொழுகைக் கூடங்களில் நடைபெற்ற பிரதான பணி
(1) சமூகச் சேவைகளில் ஈடுபடல் (2) அப்பிரதேசங்களில் வழக்குகளை விசாரித்தல்
(3) யூதர்களுக்கு ஆன்மிக அறிவூட்டல் (4) தொழிற்பயிற்சி அளித்தல்

**12.** இயேசுவின் உயிர்ப்பின் பின் எம்மா என்ற ஊருக்குச் சென்ற சீடர்களின் எண்ணிக்கை
(1) இரண்டு (2) மூன்று (3) பன்னிரெண்டு (4) எழுபது

**13.** “ஆலயக் கட்டடம் மக்களுக்காக” என்ற உன்னத கருத்தைத் தெரிவித்த அருட்பணியாளர்
(1) மைக்கல் ரொட்ரிகோ (2) திஸ்ச பாலசூரிய
(3) பீட்டர் ஜெராட் (4) சந்திரா பர்னாந்து

**14.** “செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு...” என்ற கூற்றைச் சரியாக நிறைவு செய்வதற்கான சொற்றொடரைத் தெரிவுசெய்க.
(1) “நீங்கள் துயருற்று அழுவீர்கள்.” (2) “நீங்கள் பட்டினி கிடப்பீர்கள்.”
(3) “நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள்.” (4) “நீங்கள் சிரித்து மகிழுவீர்கள்.”

**15.** பவுலை தெய்வமாகக் கருதிய இடம்
(1) மால்தா (2) ஏதென்சு (3) எபேசு (4) கொரிந்து

**16.** செசரியாவில் இடைவிடாது கடவுளிடம் மன்றாடிய உரோம நூற்றுக்கதிபதி
(1) நிக்கோதேமு (2) கொர்னேலியு (3) அனனியாஸ் (4) யாவீரு

**17.** இயேசு மற்றும் திருமுழுக்கு யோவானின் பிறப்புகளில் காணப்படும் பொதுவான குணாதிசயம்
(1) இந்தப் பிறப்புகளைக் குறித்து வான தூதர் அறிவித்தமை
(2) கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வருகை தந்தமை
(3) ஏரோது அரசர் கலக்கமடைந்தமை
(4) வானத்தில் ஒரு நட்சத்திரம் உதித்தமை

**18.** பின்வரும் பண்புகளைக் கருதுக.
A - தனது சக்தியில் செயற்படுபவர்.
B - துயருற்றவர்களை மீண்டும் துன்புற விடமாட்டார்.
C - துன்பம், துயரம் வராதிருக்க மன்றாடுபவர்.
D - அதிகார ஆளுமைத் தொனியிலன்றி மென்மையாகச் செயற்படுபவர்.

மேற்கூறியவற்றுள், துன்புறும் பணியாளரைக் குறித்து ஏசாயா குறிப்பிடும் குணாதிசயங்களின் சோடி யாது?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**19.** பவுல் (சவுல்) தமஸ்குவை நோக்கிச் சென்றது
(1) அனனியாவைச் சந்திப்பதற்காகும்.
(2) கிறிஸ்தவர்களைக் கைது செய்து துன்புறுத்துவதற்காகும்.
(3) யூத சமயத்தைப் பிரசாரம் செய்வதற்காகும்.
(4) ரோம ஆளுனரின் உத்தரவை நிறைவேற்றுவதற்காகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**20.** மரியா மற்றும் யோசேப்பின் வாழ்க்கைக்கூடாக தற்காலத்தில் எமது வாழ்க்கைக்கு பெற்றுக்கொள்ளத்தக்கது
(1) தெரிந்துகொள்ளலைக் குறித்துத் தற்புகழ்ச்சியடைதல்
(2) தெரிந்துகொள்ளலைக் குறித்துப் பெருமையடைதல்
(3) இறை கட்டளைக்குக் கீழ்ப்படிதல்
(4) யூத சமூகத்தின் கட்டுப்பாடுகளை ஆராய்தல்

**21.** யோபு மற்றும் ஏரேமியாவிற்கிடையில் காணப்படும் பொதுவான குணாதிசயம் யாது?
(1) இறைசித்தத்தின் மத்தியில் கவலையுடன் காத்திருத்தல்
(2) சகல துன்பங்கள், துயரங்களை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ளல்
(3) துன்பங்கள், துயரங்களின்போது முறுமுறுப்புடன் வாழுதல்
(4) சகல செல்வச் செழிப்புகளையும் இழந்த நிலையில் கவலையுடன் வாழுதல்

**22.** பேதுருவின் மறுதலிப்பை கிறிஸ்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்தின்போது முகங்கொடுக்க வேண்டியேற்படும்?
(1) எல்லோரும் உண்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தும்போது
(2) உண்மைக்காக தனியாக நிற்கும்போது
(3) உண்மைக்காக மன்றாடலில் மட்டும் ஈடுபடும்போது
(4) உண்மையைப் புறந்தள்ளுவதற்காக நண்பர்களுடன் கலந்தாலோசிக்கும்போது

**23.** "ஓய்வுநாள் மனிதருக்கே அன்றி மனிதர் ஓய்வுநாளுக்கு அல்ல" என்ற கற்பித்தலின் மூலம் நமக்கு வழங்கப்படும் செய்தி
(1) ஓய்வு நாளிலும் கூட மனிதத்துவத்திற்கு மரியாதை செலுத்திச் செயற்படவேண்டும் என்பதாகும்.
(2) ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதன் மூலம் எவரும் எந்தவொரு வேலையையும் செய்யக்கூடாது என்பதாகும்.
(3) ஓய்வு நாளில் வேலை செய்வது சட்டத்தை மீறுதல் என்பதாகும்.
(4) ஓய்வு நாளில் வேலை செய்வது 10 கட்டளைகளை மீறுதல் என்பதாகும்.

**24.** "அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார்" என்ற கூற்றினூடாக எமது வாழ்விற்குக் கிடைக்கும் செய்தி யாது?
(1) கோதுமையையும் பதரையும் பிரித்தெடுத்தல் என்பதாகும்.
(2) மனித வாழ்வின் இறுதித் தீர்மானத்தை எடுப்பவர் இயேசு என்பதாகும்.
(3) மனித வாழ்வில் காணப்படும் அருவருப்பானவற்றைப் பிரித்து அப்புறப்படுத்தலாம் என்பதாகும்.
(4) நன்மை, தீமையைப் பிரித்தெடுக்க சுளகு ஒரு முக்கிய உபகரணம் என்பதாகும்.

**25.** "இயேசு பகைமை என்னும் சுவரைத் தகர்த்தெறிந்தார்" என்ற கூற்றை எமது நாட்டுடன் தொடர்புபடுத்தி எவ்வாறு பயன்படுத்தலாம்?
(1) இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்க வேண்டும்.
(2) மற்றைய நம்பிக்கைகளையும் நாம் பின்பற்றவேண்டும் என்பதைக் காட்டுவதற்காகும்.
(3) சகல சமயங்களும் ஒன்றே என்பதைக் காட்டுவதற்காகும்.
(4) நாட்டுக்குள் ஒரு கலாசாரம் மட்டுமே காணப்பட வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

**26.** இயேசுவின் ஒலிவ மலையில் செய்த மன்றாட்டிற்கூடாக கிறிஸ்தவர்களாகிய நாம் விளங்கிக்கொள்வது யாது?
(1) தொடர்ச்சியான மன்றாடல் மட்டுமே முக்கியமானது என்பதனையாகும்.
(2) மன்றாடல் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உயர்ந்த ஆயுதமாகும் என்பதனையாகும்.
(3) மன்றாடலிற்கூடாக இறைசித்தத்திற்கு அடிபணிய வேண்டும் என்பதனையாகும்.
(4) ஒலிவ மலை போன்ற சூழ்நிலையில் மன்றாட வேண்டும் என்பதனையாகும்.

**27.** ஒரே கிண்ணத்தில் அருந்துதலின் மூலமாக இயேசு, அவருடைய சிந்தப்படுகின்ற இரத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட
(1) புதிய உடன்படிக்கையை நிலைப்படுத்தினார்.
(2) அப்பம் பிட்கும் சடங்கை நிலைப்படுத்தினார்.
(3) யூத சடங்கை நிறைவேற்றலை நிலைப்படுத்தினார்.
(4) யூதர்களின் பஸ்காவிற்கு வழியமைத்தலை நிலைப்படுத்தினார்.

[பக். 4 ஐப் பார்க்க

**28.** அரிமத்தியா யோசேப்பு யூத தலைமைச் சங்க உறுப்பினராக இருப்பினும், இயேசுவின் மரண தண்டனையை **ஏற்றுக்கொள்ளாமைக்குக்** காரணம்

(1) அவர் சத்தியத்திற்கு சாட்சி பகிர்பவராய் இருந்தமையினாலாகும்.
(2) மக்கள் போராட்டம் ஏற்படும் என அவர் பயந்தமையினாலாகும்.
(3) மரண தண்டனைகளை அவர் ஏற்றுக்கொள்ளாமையினாலாகும்.
(4) மக்களினால் ஒதுக்கப்பட்டுவிடுவோம் என அவர் பயந்தமையினாலாகும்.

**29.** பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - ஆயரின் அன்பிற்கூடாக அர்ப்பணித்தல்
B - ஆயர் தனது சொந்த விருப்பப்படி மட்டும் நடத்தல்
C - மந்தைகளாகச் செயற்படுவதை ஆராய்தல்
D - தாழ்மையின் பணிநிலைக்கூடாகச் செயற்படல்

மேற்குறித்தவற்றுள் ஆயர்களின் தலைவர்களாகச் செயற்பட வேண்டிய விதத்தை எடுத்துக்காட்டும் மிகப் பொருத்தமான சோடி

(1) A, C (2) A, D (3) B, D (4) C, D

**30.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இனங்களுக்கிடையே ஒற்றுமைக்காக மக்களை வலுப்படுத்துதல்
B - கிறிஸ்தவர் மத்தியில் மட்டும் சமத்துவம் ஏற்படும் வகையில் சபையை வலுப்படுத்துதல்
C - நீதி மற்றும் நியாயத்திற்காகச் செயற்படும் வகையில் இளைஞர்களை வலுப்படுத்துதல்
D - தேவை ஏற்படும்போது மட்டும் அரச நிறுவனங்களை வலுப்படுத்துதல்

மேற்குறித்தவற்றுள் மெசியாவின் தியாக வாழ்வினால் நமக்குக் கிடைக்கும் நிறைவான வாழ்வை ஏற்படுத்தக் கூடிய விதத்தை எடுத்துக்காட்டும் கூற்றுகளின் சோடி யாது?

(1) A, B (2) A, C (3) B, C (4) C, D

**31.** இலங்கையில் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்காக கிறிஸ்தவர்களாகிய நாம் செய்ய வேண்டிய பிரதான பணி யாது?

(1) புதிய வழியொன்று தொடர்பாக அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க முயற்சித்தல்
(2) நிவாரணங்கள் வழங்குவதில் மட்டும் திருப்தியடைதல்
(3) அரச நிறுவனங்களுக்கு அறிவித்துக் காத்திருத்தல்
(4) அவர்களை இரக்கத்தோடும் அன்போடும் பராமரித்தல்

**32.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - வேறு மதத்தவரோடு சேர்ந்து செயற்படல் வேண்டும்.
B - இறை அரசைக் குறித்து சரியான சிந்தனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
C - அன்பின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு ஒரு குழுவாகச் சாட்சி பகிரல் வேண்டும்.
D - 'ஓநாய்களுக்கு' எதிராகச் செயற்படல் வேண்டும்.

மேற்குறித்தவற்றுள் சுயவிருப்பத்துடன் மறைதூதுப் பணியில் ஈடுபடுவோர் தொடர்பான சரியான கூற்றுகளின் சோடி யாது?

(1) A, B (2) A, C (3) B, C (4) B, D

**33.** தேரேசா அம்மையாரின் பணிகளினூடாக நாம் பெற்றுக்கொள்ளத்தக்க பாடமாக அமைவது

(1) தெரிவுசெய்யப்பட்ட மக்கள் குழுவிற்கு மட்டும் பணிசெய்தல்
(2) தராதரம் பாராமல் நிர்க்கதியற்றோருக்குப் பணிசெய்தல்
(3) எமக்கு நன்மை செய்வோருக்குப் பணிசெய்தல்
(4) உயர் கௌரவத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பணிசெய்தல்

**34.** ஒழுக்கம் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு மிகப் பொருத்தமான முறையாக அமைவது

(1) கட்சி அரசியலுக்கூடாகச் செயற்படல்
(2) சமய நிறுவனங்களுக்கூடாகச் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்
(3) குடும்பத்தில் ஆரம்பித்து சமூகத்தைக் கட்டியெழுப்புதல்
(4) கல்விமான்களை மாத்திரம் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புதல்

[பக். 5 ஐப் பார்க்க

**35.** உலகத்தில் கிறிஸ்தவ 'அன்பை' அதிக அர்த்தமுள்ளதாக்கும் சந்தர்ப்பமாவது
(1) திருமணம் செய்ய இருந்த நபர் மரணமடைந்தமையால் திருமணம் செய்யாதிருத்தல்
(2) தாயின் அறுவைச் சிகிச்சைக்காக மகன் இரத்ததானம் செய்தல்
(3) தனது நிலத்தைக் கொள்ளையடித்தவருக்கு இரத்ததானம் செய்தல்
(4) சிறுவர் விடுதியில் இருக்கும் சிறுவர்களைக் கவனித்துக்கொள்ளல்

**36.** இறை அரசின் போதனைகளுக்கேற்ப எமது சமூகம் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும்?
(1) ஒரு குறிப்பிட்ட குழுவினரின் சம உரிமை மற்றும் நீதியை அடிப்படையாகக் கொண்டாகும்.
(2) ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைப் பாதுகாக்கும் அடிப்படையைக் கொண்டாகும்.
(3) மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அடிப்படையைக் கொண்டாகும்.
(4) சகல மக்களினதும் இயற்கை, விலங்குகளினதும் சம உரிமையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்டாகும்.

**37.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - எருசலேமில் யுத்த மனநிலை கட்டியெழுப்பப்படுதல்
B - சுபீட்சமும் சமாதானமும் நிறைந்த வாழ்க்கை முறை கட்டியெழுப்பப்படுதல்
C - எருசலேமில் யுத்த மனநிலை முடிவுக்கு வரவுள்ளமை
D - எருசலேமில் சமாதானத்தை மீறிய வாத, பேதம், வைராக்கியம் என்பன காணப்படுகின்றமை

மேற்குறித்தவற்றுள் "தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், ஈட்டிகளை கருக்கரி வாள்களாகவும் அடித்துக்கொள்வார்கள்" என்ற கூற்றின் மூலம் மிக்கா இறைவாக்கினர் எதிர்வுகூறும் கூற்றுகளின் சோடியைத் தெரிவுசெய்க.

(1) A, B (2) A, C (3) B, C (4) C, D

**38.** இறையரசின் உச்சக்கட்டமாக அமைவது
(1) இயேசுவின் பிறப்பு
(2) இயேசுவின் மீண்டும் வருகை
(3) இயேசுவின் மரணம்
(4) இயேசுவின் உயிர்ப்பு

**39.** நாம் சமூகத்தில் அன்புடன் செயற்படுவது எவ்வாறு?
(1) செல்வத்தைச் சேகரித்து அதில் சிறுபகுதியை ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ளல் மூலமாகும்.
(2) சிநேகத்துவத்தை வலுப்படுத்தி புகழ்ச்சியைப் பாதுகாத்தலின் மூலமாகும்.
(3) உண்மையின் ஆளுமைக்கூடாகப் பரிவுடன் செயற்படுவதன் மூலமாகும்.
(4) சுயத்தை நேசித்து குடும்பத்தைப் பாதுகாப்பதன் மூலமாகும்.

**40.** ஆபிரகாமின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நாம் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது
(1) எமக்குச் சொந்தமான வளங்களைப் பாதுகாப்பதன் மூலமாகும்.
(2) நாம் செல்லும் எந்தவொரு இடத்திற்கும் நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்துக்கொள்ளல் மூலமாகும்.
(3) நாம் அறியாத தூர இடங்களுக்குச் சென்று நமக்கே பணிசெய்தலின் மூலமாகும்.
(4) எமக்குச் சொந்தமான வளங்களைத் தியாகம் செய்து இறை ஆணைக்குக் கீழ்படிதல் மூலமாகும்.

* *

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

## கிறிஸ்தவம் II

* **முதலாம்** வினாவிற்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) (அ) இயேசுவை சிலுவையிலறையும்படியாக தீர்மானம் எடுத்தவர் யார்?

(ஆ) இயேசுவிற்குப் பதிலாக விடுதலை செய்யும்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நபர் யார்?

(ii) இயேசுவைக் காட்டிக்கொடுத்தவர் யார்? அதற்கு அவர் பயன்படுத்திய முறை என்ன?

(iii) (அ) கடவுள் உயரமான அரியணையில் அமர்ந்திருக்கும் காட்சியைக் கண்ட இறைவாக்கினர் யார்?

(ஆ) அந்த இறைவாக்கினர் தமது அழைப்பிற்கு முதலில் கொடுத்த மறுமொழிகளில் **ஒன்றைக்** குறிப்பிடுக.

(iv) இலாசர், செல்வந்தர் ஆகியோரின் வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டும் **ஒவ்வொரு** காரணியை எழுதுக.

(v) (அ) துரோவாவில் நடைபெற்ற அற்புதம் என்ன?

(ஆ) அந்த அற்புதத்தைச் செய்தவர் யார்?

(vi) "முழு இஸ்ரயேல் மக்களிடத்திலாவது நான் இவ்வாறான விசுவாசத்தைக் காணவில்லை."

(அ) இயேசு எந்த நபரைக் குறித்து இவ்வாறு கூறினார்?

(ஆ) இதனூடாக வெளிப்படும் இறையரசின் குணாதிசயம் என்ன?

(vii) ஆதிகிறிஸ்தவ சபையின் 'ஒன்றிணைந்த ஐக்கியத்தை' எடுத்துக்காட்டும் அம்சங்கள் **இரண்டை** எழுதுக.

(viii) கிறிஸ்தவ அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டு சமூகத்தில் சகவாழ்வை ஏற்படுத்தக்கூடிய விதங்கள் / செயற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) (அ) 'அறியாத தெய்வத்திற்கு' என்ற பலிபீடத்தை பவுல் கண்ட நகரத்தின் பெயர் என்ன?

(ஆ) தூய பவுல் அந்நகரின் மக்களுக்குப் போதிப்பதற்காகப் பயன்படுத்திய முறைகளில் **ஒன்றைக்** குறிப்பிடுக.

(x) கறுப்பின வெள்ளை மக்களிடையே இனவேறுபாட்டிற்கு எதிராக உயிரைப் பயணம் வைத்துப் போராடிய **இரண்டு** தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**2.** (i) (அ) சீசருக்கு வரி செலுத்துவது தொடர்பான கேள்வியை முன்வைத்தவர் யார்?

(ஆ) அதற்குத் மறுமொழி கொடுப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நாணயம் யாது?

(ii) இயேசுவைத் தொடர்ச்சியாக விமர்சனத்துக்கும் சவாலுக்கும் உட்படுத்திய **மூன்று** யூத சமயக் குழுக்களைக் குறிப்பிடுக.

(iii) "சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்குரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்ற அறிக்கையின் மூலம் இன்றைய கிறிஸ்தவ சமூகத்திற்கு வழங்கக்கூடிய **ஐந்து** உதாரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** நாம் எவ்வாறு செயலில் காட்டலாம் எனச் சுருக்கமாக விளக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

**3.** (i) தூய ஆவியானவரின் வழிநடத்தலில் வாழும் ஒருவராக நீங்கள் வெளிப்படுத்தும் நடத்தை முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) தூய ஆவியானவரினால் வழிநடத்தலுக்கு அப்பாற்பட்டு வாழ்வில் செயற்படுவோரில் காணத்தக்க பண்புகள் **மூன்றை** எழுதுக.

(iii) உமது நண்பர்கள் இன்றைய சமூகத்தில் சந்திக்கும் சவால்கள் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** வெற்றிகொள்வதற்கு நீர் எவ்வாறு உதவ முடியும் எனச் சுருக்கமாக விளக்குக.

**4.** (i) (அ) எகிப்தில் துன்புற்ற மக்கள் யாரிடத்தில் கூக்குரலிட்டார்கள்?

(ஆ) அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அனுப்பப்பட்டவர் யார்?

(ii) இஸ்ரேலிய மக்கள் எகிப்தில் துன்புறுவதற்கு ஏதுவான காரணங்கள் **மூன்றை** எழுதுக.

(iii) இன்றைய சமூகத்தில் நமக்குக் காணவும் கேட்கவும் கிடைக்கும் கொடுமைகள், துன்பங்கள் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றுக்கு** நீர் முன்வைக்கும் தீர்வு நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

**5.** (i) இறைவாக்கினர் ஆமோஸ் இறைவாக்கினராக அழைக்கப்படுவதற்கு முன்னர் செய்த தொழில்கள் **இரண்டை** எழுதுக.

(ii) ஆமோஸ் வாழ்ந்த சமூகத்தில் காணப்பட்ட **மூன்று** அநீதியான செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

(iii) கிறிஸ்தவர்களாகிய நாம், இன்றைய சமூகத்தில் இவ்வாறான அநீதிகளின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் **ஐந்தைச்** சுருக்கமாக விவரிக்குக.

**6.** (i) சவுல் (பவுல்) மற்றும் பர்னபா பிறந்த நகரங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுக.

(ii) (ஆ) பர்னபா சிரிய அந்தியோக்கியாவிற்கு வந்தபோது அங்கிருந்த சபையானது எவ்வாறு வளர்ச்சியடைந்திருந்தது?

(ஆ) அந்தியோக்கியாவின் வளர்ச்சியைக் கண்டபோது பர்னபாவின் வெளிப்பாடு எவ்வாறு அமைந்திருந்தது?

(இ) மறைத்தூதுப் பணிக்கு பவுல் மற்றும் பர்னபாவை அனுப்புவதற்கு முன்னர் அவர்கள் எவ்வாறு ஊக்கப்படுத்தப்பட்டனர்?

(iii) முதலாவது மறைத்தூதுப் பணியை அடிப்படையாகக் கொண்டு இன்றைய சமூகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளின் போது கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்றத்தக்க நன்மையான உபாயங்கள் **ஐந்தை** உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக.

**7.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றிற்கென தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு சிறுகுறிப்பெழுதுக.

(i) தீர்ப்பும் சிலுவை மரணமும்

- இயேசுவிற்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள்
- இயேசுவிற்குத் தீர்ப்பளித்த தனிநபர்கள், குழுக்கள்
- இயேசுவின் துன்பம் மற்றும் மரணம் ஏற்பட்ட விதம்
- இயேசு தீர்ப்பு விசாரணையில் கூறியவையும் சிலுவையைச் சுற்றிலும் இருந்தவர்கள் இயேசுவுக்குக் கூறியவையும்
- நீதியான தீர்ப்பு மற்றும் ஒரு நல்ல மரணத்தின் எதிர்பார்ப்பு

(ii) இறைவாக்கு

- இறைவாக்கு என்பது
- கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய இறைவாக்கு
- அவற்றில் காணத்தக்க விசேட பண்புகள்
- கிறிஸ்து பிறப்பின்போது இருந்த சமூகத்தின் நிலை
- இன்றைய இறைவாக்குப் பணியை அறிந்துகொள்ளல்

[பக். 8 ஐப் பார்க்க

(iii) மன்னிப்பு

- இயேசு மன்னிப்பைக் குறித்து கற்பித்த சந்தர்ப்பங்கள்
- மன்னிப்பு என்பது பற்றிய, இயேசுவின் விசேட செய்தி
- மன்னிப்பு கற்பித்தல் மட்டுமன்றி இயேசுவின் செயல்களிலும் காணக்கிடைத்த ஒன்றாகும்.
- மன்னிப்பதன் மூலமாக, கடவுளைப் பற்றி இயேசு எடுத்துக்காட்டிய செய்தி
- மன்னிப்பின் முக்கியத்துவத்தைத் தமது வாழ்வின் உதாரணங்களுடாக எடுத்துக்காட்டிய கிறிஸ்தவர்கள்

(iv) உலகியல் மற்றும் ஆன்மிக ஏழ்மை

- இயேசு வாழ்ந்த சமூகத்தில் காணப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகள்
- செல்வந்தர்கள் மற்றும் செல்வச் செழிப்பு குறித்த இயேசுவின் போதனைகள்
- செல்வச் செழிப்பானது இறை அரசிற்குத் தடையாக உள்ளது.
- இறை அரசிற்கும் எமக்கும் இடையில் தடைகள் இருப்பின், இயேசுவின்படி பல்வேறு படிமுறைகளை எடுக்கவேண்டும்.
- தற்காலத்தில் ஏழ்மையை விளங்கிக்கொள்ளலும் தேவையானவாறு அதற்குப் பிரதிபலிப்புக்களைக் காட்டுதலும்

* * *